சர்வதேச அரங்க நிறுவனம் (ITI)
நிகழ்த்துக்கலைகளுக்கான உலகளாவிய அமைப்பு

# *World Theatre Day Message 2026*

## உலக நாடக நாள் செய்தி 2026




உலக நாடக நாள் செய்தியை வழங்குபவர்:

**Willem DAFOE,** USA
**Actor, Theatre Maker**

வில்லியம் ஜேம்சு டஃபோ, அமெரிக்கா
நடிகர், அரங்கப் படைப்பாளர்

தமிழ் மொழிபெயர்ப்பு :

**Dr. M. SUBBIAH,**
**Associate Professor & Head**
Department of Performing Arts, Pondicherry University

முனைவர். மு. சுப்பையா,
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
நிகழ்கலைத் துறை, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி


நான் ஒரு நடிகன். உலகம் என்னை பெரும்பாலும் ஒரு திரைப்பட நடிகராகவே அடையாளம் கொள்கின்றது. ஆனால் என் கலைவாழ்க்கையின் அடிப்படை என்பது அரங்கத்தோடும் நாடகத்தோடும் தான் ஆழமாக வேரூன்றி இருக்கின்றது. 1977 முதல் 2003 காலகட்டத்தில் நியூயார்க் நகரில் உள்ள தி வூஸ்டர் நாடகக் குழுவின் உறுப்பினராக இருந்து அக்குழுவின் தி பெர்பார்மன்ஸ் கேரேஜ் என்கின்ற ப்ளாக் பாக்ஸ் அரங்கில் பல நாடகப் படைப்புகளை நான் உருவாக்கியும் நடித்தும் இருக்கின்றேன். அங்கு உருவாக்கப்பட்ட நாடகப்படைப்புகள் மூலம் உலகம் முழுவதும் பயணித்தும் இருக்கின்றேன். ரிச்சர்ட் ஃபோர்மேன், ராபர்ட் வில்சன் மற்றும் ரோமியோ காஸ்டெல்லூசி போன்ற முன்னோடி அரங்க ஆளுமைகளுடன் பணியாற்றிஇருக்கின்றேன். வெனிஸ் தியேட்டர் பின்னாலே, என்கின்ற பன்னாட்டு நாடக விழாவை நிகழ்த்தக்கூடிய அமைப்பின் இயக்குநராக தற்போது பணியாற்றி வருகின்றேன். இந்தப் பணி நிமித்தமானது ஏற்கனவே என்னுள் உழன்று கொண்டிருந்த நாடகத்தோடு ஒன்றித்துப் பயணிக்க வேண்டும் என்ற என் ஆர்வத்திற்கு சரியான அஸ்திவாரத்தை அமைத்துக்கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அரங்கின் முக்கியத்துவம் மீதான என் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

என் நாடகப் பயணத்தின் ஆரம்ப காலங்களில் எங்கள் நாடகங்களுக்கு பலமுறை மிகக் குறைந்த பார்வையாளர்களே வந்தார்கள். நாடகத்தில் பங்கேற்கும் நடிகர்களின் எண்ணிக்கையை விடக் குறைந்த பார்வையாளர்கள் வந்தால் நாடக நிகழ்வை ரத்து செய்யலாம் என்ற விதியும் இருந்தது. ஆனால் நாங்கள் ஒருபோதும் எங்கள் நாடக நிகழ்வை ரத்து செய்ததில்லை. எங்கள் குழுவில் இருந்த பலர் முறையான நாடகப் பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் பல்வேறு துறைகளில் இருந்து நாடகத்தை உருவாக்கும் எண்ணத்தோடு ஒன்றிணைந்தவர்கள். நிகழ்வு கண்டிப்பாக நடந்தேறவேண்டும் என்கின்ற மந்திரம் எங்கள் கோட்பாடாக இருக்கவில்லை. ஆனால் பார்வையாளர்களுடனான சந்திப்பை தொடர்ச்சியாக நிகழ்த்தவேண்டும் என்கின்ற பொறுப்பை மிக முக்கியமாகக் கருதினோம்.

எங்களின் பல நாடகப்படைப்புகள் பகல் நேரங்களில் உருவாக்கப்பட்டு ஒத்திகை செய்யப்பட்டு மாலை நேரங்களில் நிகழ்த்தப்பட்டவை. சில சமயங்களில், ஒரு நாடக உருவாக்கத்திற்க்காக பல ஆண்டுகளை நாங்கள் செலவளித்திருக்கின்றோம் . அதே சமயம் எங்களின் பழைய நாடகப் படைப்புகளை உலகம் முழுக்க சுற்றுப்பயணம் செய்து நிகழ்த்தி அதன் மூலம் எங்களின் வாழ்வாதாரத்தை தக்கவைத்திருக்கின்றோம். ஒரு நாடகத்தில் பல ஆண்டுகள் வேலை செய்வது பலசமயங்களில் எனக்கு மிகுந்த சலிப்பையும் சோர்வையும் ஏற்படுத்தியது. அத்தகைய ஒத்திகைகளும் எனக்குச் சற்று கடினமாக இருந்தன. ஆனாலும் இப்படிப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடு எப்போதும் உற்சாகமானவை. நாங்கள் செய்துகொண்டிருந்ததில் இருந்த ஆர்வத்தின் அளவை, அங்கு கூடியிருந்த மிகச் சிறிய பார்வையாளர் கூட்டமே மதிப்பிட்டாலும்கூட ஒரு உண்மை எனக்குப் புரிந்தது. மக்கள் கூட்டம் குறைவாக இருந்தாலும், பார்வையாளர்களே சாட்சிகளாக இருந்து அந்த நாடக அரங்கிற்கும் அந்நிகழ்விற்கும் அர்த்தத்தையும் உயிரையும் கொடுத்தார்கள் என்பதை அது எனக்கு உணர்த்தியது.

சூதாட்ட அரங்கின் முகப்பில் உள்ள அறிவிப்புப் பலகை சொல்வது போல, “வெற்றி பெற வேண்டுமாயின் உங்களின் இருப்பு மிக அவசியம்”. அதேபோல் ஒரே நேரத்தில் பகிரப்படும் ஒரு படைப்பாற்றல் அனுபவம்... அது முன்கூட்டியே வடிவமைக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு நிகழ்வும் மீண்டும் மீண்டும் புதியதாகவே பிறக்கிறது. இதுவே நாடகக்கலையின் மிகப் பெரிய வலிமை. சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நம்மையும் உலகையும் புரிந்து கொள்ள நாடகம் இன்றைக்கு மிகவும் அவசியமானது.

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் ஒன்று என்னவென்றால் அது புதிய தொழில்நுட்பங்களும் சமூக வலைத்தளங்களும் தான். அவை மனிதர்களை இணைக்கின்றது என்று சொல்கின்றன. ஆனால் பல நேரங்களில் அவை மனிதர்களை ஒருவரிடமிருந்து ஒருவர் தனிமைப்படுத்துகின்றன. நானும் கணினியைப் பயன்படுத்துகிறேன். சமூக வலைத்தளங்களில் இல்லாவிட்டாலும் ஒரு நடிகராக என்னைப் பற்றி கூகுளில் தேடியிருக்கிறேன். தகவல்களுக்காக செயற்கை நுண்ணறிவையையும் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால், மனிதத் தொடர்பு என்பது கருவிகளுடனான உறவுகளால் மாற்றீடு செய்யப்பட்டுவிடும் அபாயத்தில் உள்ளது என்பதை உணராமல் இருக்க முடியாது. சில தொழில்நுட்பங்கள் நமக்கு நன்றாகப் பயன்பட்டாலும், தகவல் தொடர்பு வட்டத்தின் மறுமுனையில் யார் இருக்கிறார்கள் என்பதை அறியாதிருக்கும் சிக்கல் ஆழமாக வேரூன்றி, உண்மை மற்றும் யதார்த்தத்தின் நெருக்கடிக்கு வழிவகுக்கிறது. இணையம் பல கேள்விகளை எழுப்பக்கூடும் என்றாலும், நாடகம் உருவாக்கும் அதிசய உணர்வை அது மிக அரிதாகவே வெளிப்படுத்துகிறது. அந்த அதிசயம் என்பது , கவனம், ஈடுபாடு மற்றும் செயல்-எதிர்வினை வட்டத்தில் கூடியிருப்பவர்களிடையே உருவாகும் ஒரு தன்னிச்சையான சமூகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

ஒரு நடிகராகவும் நாடகக் கலைஞராகவும், நான் நாடகத்தின் ஆற்றலில் இன்னமும் உறுதியாக தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருக்கிறேன். பிரிவினைவாதத்தைத் தூண்டக்கூடியதும் அதிகார துஸ்பிரயோகம் நிறைந்ததுமான ஏகாதிபத்தியத்தின் சுவடுகளோடு வன்முறைகளால் புரையோடிப்போன இந்த உலகில், நாடகக் கலைஞர்களாகிய நமது சவால் என்னவென்றால், நாடகத்தை முற்றிலும் திசைதிருப்பி மக்களை ஏதுமற்று வெறுமனே மகிழ்விக்கும் ஒரு வணிகப் பொழுதுபோக்கு நிறுவனமாகவோ அல்லது மரபுகளை வறண்ட முறையில் பாதுகாக்கும் பாரம்பரியத்தின் அருங்காட்சியகமாகவோ சீரழிப்பதைத் தவிர்த்து, அதன் வலிமையை வளர்த்து, மக்களையும், சமூகங்களையும், கலாச்சாரங்களையும் இணைத்து, எல்லாவற்றிற்கும் மேலாக நாம் எங்கே செல்கின்றோம் நம்முடைய இருப்பும் நகர்வும் எதை நோக்கி பயணப்படப்போகின்றது என்ற உக்கிரமான உண்மையான அடிப்படை கேள்வியை எழுப்புவதே ஆகும்.

சிறந்த நாடகம் அல்லது அரங்கம் என்பது நாம் சிந்திக்கும் முறையை சவால் செய்கிறது. நாம் கனவு காணும் உலகை கற்பனை செய்ய நம்மைத் தூண்டுகிறது.

நாம் மனிதர்கள் சமூக உயிரினங்கள். உலகத்துடன் தொடர்பு கொள்ளும் வகையில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம். நமது ஒவ்வொரு புலனும் ஒரு சந்திப்பிற்கான நுழைவாயிலாகும், மேலும் இந்த சந்திப்பின் மூலம் நாம் யார் என்பதற்கான ஒரு சிறந்த வரையறையையும் அடையாளத்தையும் அடைகிறோம். கதைசொல்லல், அழகியல் உணர்வு, மொழி, சொல்லாடல், உடலியக்கம், காட்சியமைப்பு என இவை அனைத்தையும் ஒன்றிணைக்கும் முழுமையான கலை வடிவமான நாடகம், கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதையும், நிகழ்காலத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது எனபதையும் நமக்கு உணர்த்துவதோடு எதிர்காலத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு வலுவான உயிருள்ள மாற்று சக்தியாக இருக்கும். இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.